மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் - துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்!



## கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**நாள் : 12.02.2026 நேரம் : காலை 10.30 மணி**

| கழக அமைப்பு | இடம் |
|---|---|
| கரூர் மாநகரம் (6 பகுதி கழகம்) | கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு |
| அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் | ஈசநத்தம் கடைவீதி |
| அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் | அண்ணா நகர், வேலம்பாடி ஊராட்சி |
| க.பரமத்தி தெற்கு ஒன்றியம் | சின்னதாராபுரம் கடைவீதி |
| க.பரமத்தி மேற்கு ஒன்றியம் | தென்னிலை கடைவீதி |
| க.பரமத்தி வடக்கு ஒன்றியம் | க.பரமத்தி கடைவீதி |
| கரூர் மேற்கு ஒன்றியம் | நொய்யல் குறுக்கு சாலை பேருந்து நிறுத்தம் |
| கரூர் வடக்கு ஒன்றியம் | வாங்கல் கடைவீதி |
| கரூர் கிழக்கு ஒன்றியம் | அரசு குடியிருப்பு பேருந்து நிறுத்தம் (வாங்கல் சாலை ) |
| தாந்தோணி மேற்கு ஒன்றியம் | மில்கேட் பேருந்து நிறுத்தம் ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சி |
| தாந்தோணி கிழக்கு ஒன்றியம் | வெள்ளியனை கடைவீதி |
| கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம் | மாயனூர் பேருந்து நிறுத்தம் |
| கடவூர் வடக்கு ஒன்றியம் | பி.உடையாபட்டி பண்ணபட்டி ஊராட்சி |
| கடவூர் தெற்கு ஒன்றியம் | ரெட்டியபட்டி கடைவீதி, மாவத்தூர் ஊராட்சி, |
| கடவூர் மேற்கு ஒன்றியம் | தரகம்பட்டி கடைவீதி |
| கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் | லாலாப்பேட்டை கடைவீதி |
| கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் | பஞ்சப்பட்டி தபால் நிலையம் அருகில், |
| குளித்தலை மேற்கு ஒன்றியம் | இனுங்கூர் கடைவீதி |
| குளித்தலை கிழக்கு ஒன்றியம் | அய்யர்மலை கடைவீதி |
| தோகைமலை மேற்கு ஒன்றியம் | தோகைமலை பேருந்து நிலையம் அருகில் |
| தோகைமலை கிழக்கு ஒன்றியம் | ஆர்டி.மலை கடைவீதி |
| பள்ளப்பட்டி நகராட்சி | ஷா நகர், பள்ளப்பட்டி |
| புகழூர் நகராட்சி | வேலாயுதம்பாளையம் தபால் நிலையம் அருகில், |
| குளித்தலை நகராட்சி | குளித்தலை தபால் நிலையம் அருகில், |
| அரவக்குறிச்சி பேரூராட்சி | AVM கார்னர், அரவக்குறிச்சி |
| புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி | தளவாபாளையம் பேருந்து நிறுத்தம் |
| புலியூர் பேரூராட்சி | புலியூர் கடைவீதி |
| உப்பிடமங்கலம் பேரூராட்சி | உப்பிடமங்கலம் தெற்கு கேட் அருகில் |
| கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி | கிருஷ்ணராயபுரம் தபால் நிலையம் அருகில், |
| பழைய ஜெயங்கொண்டம் பேரூராட்சி | பழைய ஜெயங்கொண்டம் பேருந்து நிறுத்தம் |
| மருதூர் பேரூராட்சி | மருதூர் தபால் நிலையம் அருகில், |
| நங்கவரம் பேரூராட்சி | நங்கவரம் தபால் நிலையம் அருகில் |

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.**
செயலாளர், கரூர் மாவட்ட தி.மு.க.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.கவையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# சேலம் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றிய, நகர அளவில் வருகிற 12.02.2026 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறும்.

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

| ஒன்றியம் / நகரம் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| மேட்டூர் நகரம் | டி.எம்.செல்வகணபதி எம்.பி மாவட்டக் கழகச் செயலாளர் | ஸ்டேட் பேங் எதிரில், மேட்டூர். |
| சங்ககிரி நகரம், சங்ககிரி கிழக்கு ஒன்றியம், சங்ககிரி மேற்கு ஒன்றியம் | பி.தங்கமுத்து மாவட்டக் கழக அவைத்தலைவர் | ஸ்டேட் பேங் எதிரில், சங்ககிரி |
| மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம், மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம் | க.சுந்தரம் மாவட்டக் கழக துணைச் செயலாளர் | ஸ்டேட் பேங் எதிரில், மகுடஞ்சாவடி |
| கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம், கொங்காணபுரம் வடக்கு ஒன்றியம் | அ.த.சம்பத்குமார் மாவட்டக் கழக துணைச் செயலாளர் | இந்தியன் பேங் எதிரில், கொங்கணாபுரம். |
| எடப்பாடி கிழக்கு ஒன்றியம்,, எடப்பாடி மேற்கு ஒன்றியம் | எஸ்.எலிசபத்ராணி மாவட்டக் கழக துணைச் செயலாளர் கவிஞர் கோனூர் வைரமணி தலைமைக் கழக பேச்சாளர் | இந்தியன் பேங் எதிரில், சித்தூர் |
| நங்கவள்ளி வடக்கு ஒன்றியம், நங்கவள்ளி தெற்கு ஒன்றியம், நங்கவள்ளி மத்தியம் ஒன்றியம் | பி.பொன்னுசாமி மாவட்டக் கழக பொருளாளர் | ஸ்டேட் பேங் எதிரில், நங்கவள்ளி |
| தாரமங்கலம் மேற்கு ஒன்றியம், தாரமங்கலம் நகரம் | பி.ஏ.முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் | ஸ்டேட் பேங் எதிரில், தாரமங்கலம் |
| கொளத்தூர் ஒன்றியம் | மு.ராமநாதன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் | ஸ்டேட் பேங் எதிரில், கொளத்தூர். |
| எடப்பாடி நகரம் | டி.எஸ்.எம்.பாஷா நகரக் கழகச் செயலாளர், நகர மன்றத் தலைவர் | தலைமை தபால் நிலையம் எதிரில், எடப்பாடி |
| மேச்சேரி கிழக்கு, மேச்சேரி மேற்கு | ப.காமராஜ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் | ஸ்டேட் பேங் எதிரில், மேச்சேரி |
| இடங்கணசாலை நகரம் | பி.ராஜவேல் மாவட்ட விவசாய அணி தலைவர் | தபால் நிலையம் எதிரில், காடையாம்பட்டி |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருடன் இணைந்து மாவட்ட நிர்வாகிகள் – ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் – நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் அந்தந்த ஒன்றியம், நகரங்களில் கலந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளகிறோம்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தின் கீழ் 52 மருத்துவ முகாம்கள்!

# சேலம் மாவட்டத்தில் 63,147 பேருக்கு மருத்துவ ஆலோசனைகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சென்னை, பிப். 10–

சேலம் மாவட்டத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாம்களில் இதுவரை 63,147 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம், பாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம், பாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 52 மருத்துவ முகாம்களில் 26,526 ஆண்களும், 36,142 பெண்களும் என மொத்தம் 63,147 பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெற்று உள்ளனர். இதில் 47,812 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 43,474 நபர்களுக்கு இ.சி.ஜி. பரிசோதனையும், 5,869 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 6,605 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 3,703 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக இச்சிறப்பு மருத்துவ முகாமானது சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம், பாவடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடத்தப்படுகிறது. ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாநகர நல அலுவலர் மரு.முரளி சங்கர், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அய்ந்தாம் ஆண்டு நினைவு நாள்



# இரா.விசுவநாதன்

முன்னாள் அவைத் தலைவர், 105 - வது வட்டம் அண்ணாநகர் பகுதி தி.மு.க

*மறைந்த நாள்: 10.02.2021*

**இந்தியாவிற்கு வழிகாட்டும், திராவிட மாடல் முதல்வரின்
ஆகச்சிறந்த சாதனைகள், திராவிட இயக்கக் கருத்தியல்களை
அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும்,
இளந்தலைவரின் பல முன்னெடுப்புகள் ஆகியவற்றை
சந்திக்கும் நபர்களிடம் கொண்டு சேர்த்திருப்பீர்,
திராவிட மாடல் 2.0 அமைய உம் முழு உழைப்பை தருவீர்.
அவ்வழியில், இருவண்ணக் கொடி உயர்வில்...**


திருமதி. **கிருஷ்ணவேணி விசுவநாதன்**

**வி.நந்தகுமார்** பி.ஏ.,
**ந.கவிதா**
**ந.சூர்யா** பி.காம்.,(எம்பிஏ.,)
**ந.மாதங்கி**

**வி.நன்மாறன்** பி.எஸ்சி.பி.எல்.,
கூடுதல் அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதி மன்றம்.
**ஆ.கலைமதி** பி.ஏ.,பிஎட்.,
**ந.க.இயல்** (பி.எஸ்சி.,)
**ந.க.இசை**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.கி. அம்பிகாபதி
## பிப்ரவரி 10 (2004)



**வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.**

**முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**“அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்
தி.மு.க.**